# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

முறையீட்டு மனு (மூ.மு) எண்: 0840/ஊராட்சி/2018

நாள்: 9/7/2018

என்.ஜி. மோகன்,
16, ரோஜா தெரு,
சத்தியசாய் நகர்,
மதுரை – 3. – மனுதாரர்

1) இராம. சக்திபிரபாகரன்,
பணிமேற்பார்வையாளர்,
கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

2) உதவி இயக்குநர் (ஊராட்சி),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர். – எதிர் மனுதாரர்

## ஆணை

மதுரை மாவட்டம், சத்தியசாய் நகர், மதுரை அவர்களின் 28.6.18 நாளிட்ட புகார் மனுவில் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு. இராம. சக்திபிரபாகரன் மீது தானும், அவருடைய அண்ணன் மகனும், திரு. இராம. சக்திபிரபாகரனின் மனைவியுமான திருமதி. சி. கண்மணி இருவரும், அவருடைய முறையற்ற இரண்டாம் திருமணம் குறித்து 2014ல் புகார் செய்த போது, இரண்டாம் திருமணத்திற்கான ஆதாரம் சமர்ப்பிக்கவில்லையென அவர்களுடைய மனு முடித்து வைக்கப்பட்டதென்றும், பின்னர். திரு. இராம. சக்திபிரபாகரனுக்கும் திருமதி. பாண்டிமீனாவிற்கும் குழந்தை பிறந்த விபரத்தை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்று சமர்ப்பித்த பின்னர், திரு. சக்தி பிரபாகரன் மீது தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி, 17 (b)ன் கீழ் 31.7.16 நாளிட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.15737/2014/PA4-ல் குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டு விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டும், விசாரணை நடைபெறவில்லையெனத் தெரிவித்து, ஒழுங்கு நடவடிக்கையின் மீது விரைவில் விசாரணை செய்து, ஆணை பிறப்பிக்க கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 9 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

23-7-18

23/7/18

பெறுநர்

என்.ஜி. மோகன்,
16, ரோஜா தெரு,
சத்தியசாய் நகர்,
மதுரை – 3.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திருவள்ளூர் மாவட்டம்,
   திருவள்ளூர். (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. ஊராட்சிப் பிரிவு உதவிப் பிரிவு அலுவலர்.